செய்தி வெளியீடு எண் :06 நாள் :07.12.2020

**தேனி மாவட்டம்**
**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள்**
**கொரோனா சிறப்பு நிதியுதவி தொகுப்பின் மூலம்**
**12 உற்பத்தியாளர் குழுக்கள், 3 தொழில் குழுக்கள் மற்றும்**
**1 உற்பத்தியாளர் கூட்டமைப்பு ஆகியவைகளுக்கு மொத்தம் ரூ.29.50 இலட்சம்**
**மதிப்பீட்டில் மூலதன மானியத்தினை வழங்கினார்:.**

******

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (07.12.2020) தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில், தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்தின் கீழ் உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்பு ஆகியவைகளுக்கான மூலதன மானியத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் வழங்கி தெரிவித்தாவது,

தமிழக அரசு உலக வங்கி நிதியுதவியுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டமானது, உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் ஒரு முன்னோடி திட்டமாகும். இத்திட்டம் ஊரக தொழில்களை மேம்படுத்தல், வேலைவாய்ப்பு மற்றும் நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் தேனி மாவட்டத்தில் பெரியகுளம் மற்றும் உத்தமபாளையம் வட்டாரங்களைச் சார்ந்த 30 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்தின் மூலம் திட்ட ஊராட்சிகளில் சுய உதவிக் குழு உறுப்பினர் மற்றும் உறுப்பினர் குடும்பங்களைச் சார்ந்தவர்களால் நடத்தப்பட்டு, கொரோனா வைரஸ் தொற்று முழு முடக்கத்தால் பாதிக்கப்பட்ட ஊரகத் தொழில்களை மேம்படுத்துவதற்காகவும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோரால் மேற்கொள்ளப்படும் வாழ்வாதாரத் தொழிலை மேம்படுத்துவதற்காகவும், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள்(குழு) பிற பகுதிகளுக்கு புலம் பெயர்ந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பிய இளைஞர்களுக்கு புதிதாக தொழில் துவங்கிடவும், தமிழகத்தில் ரூ.300 கோடியில் சிறப்பு நிதி உதவி தொகுப்புத் திட்டம் தமிழக அரசால் தொடங்கி வைக்கப்பட்டு, சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேனி மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் கொரோனா காலகட்டத்தில் பாதிக்கப்பட்ட தொழில்களை மேம்படுத்தும் பொருட்டு தனிநபர் தொழில் கடனாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் ஒரு நபருக்கு அதிகபட்சமாக ரூ.50,000/-என்ற அடிப்படையில் 518 சுய உதவிக் குழு பெண்களுக்கு ரூ.1.20 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் மாற்றுத் திறனாளிகள், கணவரை இழந்தவர்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர்களின் தொழில் மேம்பாட்டிற்காக, தொழில் மூலதன நிதியாக தனிநபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.20,000/-என்ற அடிப்படையில் மாற்றுத்திறனாளிகள் 115 நபர்களுக்கும், கணவரை இழந்தவர்கள் 116 நபர்களுக்கும், கணவனால் கைவிடப்பட்டவர்கள் 12 நபர்களுக்கும் மொத்தம் 243 நபர்களுக்கு ரூ.37.50 இலட்சமும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வெளிநாடு, வெளிமாநிலம் மற்றும் வெளி மாவட்டங்களுக்கு வேலைக்குச் சென்று கொரோனா காலகட்டத்தில் வேலை இல்லாமல் புலம் பெயர்ந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பிய திறன்பெற்ற இளைஞர்களுக்கு தொழில் துவங்குவதற்காக கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலமாக தலா ரூ.1 இலட்சம் வீதம் 24 நபர்களுக்கு ரூ.24 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட விவசாய உற்பத்தியாளர் குழுக்களில் உள்ள விவசாயிகள் தங்களுக்குத் தேவையான வேளாண் கருவிகள் மற்றும் இடுபொருட்கள் (விதைகள், உரம், களை எடுக்கும் இயந்திரம், பூச்சி மருந்து தெளிப்பான், உழுகலப்பை) கொள்முதல் செய்தல், உற்பத்தி செய்த விளை பொருட்களை விற்பனை செய்வதற்கான செலவினங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவி பெறுவதற்கும் ஒருமுறை மூலதன மானியமாக குழு ஒன்றுக்கு ரூ.1.50 இலட்சம் வீதம் 12 குழுக்களுக்கு மொத்தம் ரூ. 18.00 இலட்சமும், குழுவாக இணைந்து தொழில் புரியும் தொழில் குழுவிற்கு மூலதன மானியமாக 3 தொழில் குழுக்களுக்கு தலா ரூ. 1.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 4.50 இலட்சமும், மேலும் ஒரு உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பிற்கு ரூ. 7 இலட்சமும் ஆகமொத்தம் ரூ. 29.50 இலட்சம் நிதியுதவி இன்றைய தினம் வழங்கப்படுகிறது.

தமது சொந்த ஊரிலேயே பொதுமக்கள் இதுபோன்று பல்வேறு தொழில்களை தொடங்கி பயன்பெறும் வகையில், தமிழக அரசால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்கள் மூலம் பயன்பெற்று வரும் பயனாளிகள் தாங்கள் பயன்பெறுவதோடு மட்டுமல்லாமல் தங்களைச் சார்ந்தோர்களுக்கும் எடுத்துரைத்து பயன்பெறச் செய்ய வேண்டும். மேலும், தாங்கள் மேற்கொள்ளும் தொழில்களில் நேர்மையுடனும், தன்னம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் செயல்பட்டு, வெற்றியடைய வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், போது, கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், உதவி ஆட்சியர் (பயிற்சி) ஞ. தாக்ரே சுபம், இ.ஆ.ப., மாவட்ட செயல் அலுவலர் (தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம்) ஆர்.ஆனந்தி, வேளாண்மைத்துறை, இணை இயக்குநர் முனைவர்.அழகு நாகேந்திரன், தோட்டக்கலைத்துறை, துணை இயக்குநர் எம்.பாண்டி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**